முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியின் சமச்சீர் கல்வித் திட்டத்தை ஆதரித்து நின்றவர்! வாழ்நாள் முழுக்க எளிய மக்களின் உரிமைக்காக–

# ஏழைக் குழந்தைகளின் கல்வி உரிமைக்காகப் பாடுபட்ட அறவழிப் போராளி, முனைவர் வசந்தி தேவி அம்மையார்!

## நினைவேந்தல் நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, ஆக.12

**சென்னை, சைதாப்பேட்டை, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் (10.8.2025) நடைபெற்ற, நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், தமிழ்நாடு மகளிர் ஆணையத்தின் முன்னாள் தலைவரும், மூத்த கல்வியாளருமான மறைந்த முனைவர் வே.வசந்திதேவி அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக உரையாற்றுகையில், "முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட சமச்சீர் கல்வித் திட்டத்தை ஆதரித்து நின்றவர்! வாழ்நாள் முழுக்க எளிய மக்களின் உரிமைகளுக்காகவும், ஏழைக் குழந்தைகளின் கல்வி உரிமைக்காகவும் பாடுபட்டவர்தான், அறவழிப்போராளி - மறைந்த முனைவர் வசந்திதேவி அம்மையார் அவர்கள்!" என்று புகழாரம் சூட்டினார்.**

இந்நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

வாழ்நாள் முழுக்க எளிய மக்களின் உரிமைகளுக்காகவும், ஏழைக் குழந்தைகளின் கல்வி உரிமைக்காகவும் பாடுபட்டவர்தான், அறவழிப் போராளி - மறைந்த முனைவர் வசந்திதேவி அம்மையார் அவர்கள்.

கல்வி என்பது வியாபாரப் பொருளாகவோ, அதிகாரக் கோட்டைக்குள் பாதுகாக்கப்படுகிற ஆயுதமாகவோ இல்லாமல் - ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்க வேண்டும்; கல்விதான் அவர்களுக்கான ஆயுதம், அதுதான் அழிக்க முடியாத செல்வம் என்கின்ற நோக்கத்தோடு தொடர்ந்து செயலாற்றி, அதற்கான இயக்கங்களை முன்னெடுத்தவர் முனைவர் வசந்திதேவி அவர்கள்.

தான் பணியாற்றிய கல்லூரிகள் தொடங்கி, நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவி வரை, சிறந்த கல்வியாளராக, தனி முத்திரை பதித்தவர் முனைவர் வசந்திதேவி அவர்கள்!

**மாநில மகளிர் ஆணையப் பொறுப்பு!**

கல்வியில் சீர்திருத்தத்தையும் சமத்துவத்தையும் வலியுறுத்தியவர். பொதுவுடைமைச் சிந்தனையும் மனித உரிமைக் கொள்கையும் கொண்ட அவர், மாநில மகளிர் ஆணையப் பொறுப்பில் இருந்த போது ஆற்றிய பணிகள் சிறப்பானவை.

தன்னுடைய பணிக்காலத்திற்குப் பிறகும் முற்போக்கு இயக்கங்களோடு சேர்ந்து நின்று, கல்வி உரிமைக்காகவும் மனித உரிமைக்காகவும் ஜனநாயகக் களத்தில் அயராமல் பாடுபட்ட அம்மையார் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட சமச்சீர் கல்வித் திட்டத்தை ஆதரித்து நின்றவர். நம் திராவிட மாடல் அரசின் பள்ளிக்கல்வி முன்னெடுப்புகளையும் மனமாரப் பாராட்டியவர்.

காலந்தோறும் கல்வியின் தரத்தை மேம்படுத்தி, கடைக்கோடி மனிதர்கள் வரை அது சென்றடைய வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தியவர்.

கல்வியாளர்களின் ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை செயல்வடிவமாக்கி, மாணவர்களை உயர்த்துவதில் உறுதியான நிலைப்பாட்டோடு செயல்பட்டு வருகின்ற திராவிட மாடல் அரசு, எளியோரும் ஏற்றம் பெறும் வகையில் மாநிலக் கல்விக் கொள்கையை அண்மையில் வெளியிட்டிருக்கிறோம்.

முனைவர் வசந்திதேவி அம்மையார் அவர்களின் நினைவைப் போற்றும் இந்த நேரத்தில், அனைவருக்குமான கல்வி உரிமையை நிலைநாட்டுகின்ற திராவிட மாடல் அரசினுடைய செயல்பாடுகள் அனைத்தும் அம்மையாருக்குச் செலுத்துகின்ற ஆக்கப்பூர்வமான அஞ்சலி என்று கூறி, முனைவர் வசந்திதேவி அவர்களுக்கு என்னுடைய புகழஞ்சலியைச் செலுத்துகிறேன்! நன்றி! வணக்கம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளரும், மத்தியக் குழு உறுப்பினருமான கே. பாலகிருஷ்ணன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், நீதியரசர் அரி பரந்தாமன், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் தலைவர் திருமதி ஏ.எஸ். குமாரி, வழக்கறிஞர் ஹென்றி திபேன், பள்ளிக்கல்வி பாதுகாப்பு இயக்கம், AID இந்தியா, அகில இந்திய ஜனநாயக மகளிர் சங்கம், கல்விக்கான அடிப்படை உரிமைக்கான தமிழ்நாடு கூட்டணி, அறப்போர் இயக்கம், சமகல்வி இயக்கம், இந்திய மாணவர் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.8.2025) சென்னை, சைதாப்பேட்டை, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், தமிழ்நாடு மகளிர் ஆணையத்தின் முன்னாள் தலைவரும், மூத்த கல்வியாளருமான மறைந்த முனைவர் வே. வசந்தி தேவி அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக உரையாற்றினார். இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளரும், மத்தியக் குழு உறுப்பினருமான கே. பாலகிருஷ்ணன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம், நீதியரசர் அரி பரந்தாமன், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் தலைவர் திருமதி ஏ.எஸ். குமரி, வழக்கறிஞர் ஹென்றி திபேன். பள்ளிக்கல்வி பாதுகாப்பு இயக்கம், AID இந்தியா, அகில இந்திய ஜனநாயக மகளிர் சங்கம், கல்விக்கான அடிப்படை உரிமைக்கான தமிழ்நாடு கூட்டணி, அறப்போர் இயக்கம், சமகல்வி இயக்கம், இந்திய மாணவர் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### திண்டுக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.

## ஒன்றிய, நகர, பேரூர் பொறியாளர் அணி பொறுப்பிற்கான நேர்காணல்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!

திண்டுக்கல், ஆக. 12–

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறியாளர் அணிக்கான நேர்காணல் இன்று (12.08.2025 – செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணியளவில் ஒட்டன் சத்திரம், அண்ணா நகர் அலுவலகத்தில் நேர்காணல் நடைபெறும் என திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளரும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சருமான அர.சக்கரபாணி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் அர.சக்கரபாணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையின்படியும், மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி. கருணாநிதி வழிகாட்டுதலின்படியும், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளரும், மண்டல பொறுப்பாளருமான கலை.கார்த்திகேயன் தலைமையிலும், திண்டுக்கல் மேற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.கார்த்திகேயன் மற்றும் துணை அமைப்பாளர்கள் முன்னிலையிலும்,

ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறியாளர் அணி பொறுப்புகளுக்கு 12.08.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் ஒட்டன் சத்திரம், அண்ணா நகர் அலுவலகத்தில் நேர்காணல் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறியாளர் அணி பொறுப்புகளுக்கு பொறியாளர் அணி செயலியின் மூலம் பதிவு செய்தவர்கள் மேற்கண்ட நேர்காணலில் பங்கேற்கும்படியும், கழகத்தினர் பங்கேற்கும்படியும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளரும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சருமான அர.சக்கரபாணி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### ஓரணியில் தமிழ்நாடு!

## நெல்லை தொகுதியில் 1 லட்சம் உறுப்பினர்களுக்குமேல் சேர்ப்பு!

### கழக நிர்வாகிகளுக்கு சு.சுப்பிரமணியன் பாராட்டு!

நெல்லை.ஆக.12

நெல்லை சட்டமன்றத் தொகுதியில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கையில் 1 லட்சம் உறுப்பினர்களை தாண்டி சேர்த்தமைக்காக கழக நிர்வாகிகளுக்கு நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:–

மண்,மொழி,மானம் காத்திட 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கையை திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் அறிவித்தார்கள்.

அதன்படி தமிழ்நாடு முழுவதும் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை மும்மரமாகவும், தீவிரமாகவும் நடைபெற்று வருகிறது.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வேண்டு கோளுக்கிணங்கவும்,கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படியும், கழக துணை பொதுச்செயலாளர், கழக நாடாளுமன்ற குழு தலைவர், மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., நெல்லை மாவட்டப் பொறுப்பு அமைச்சர், கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் அறிவுறுத்தலின் படி, நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி நெல்லை மேற்கு மாநகரம் முழுவதும் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை பணிகள் கடந்த ஜ⁶லை 3 ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 10 ம் தேதி வரை நடைபெற்றது.

இதில் நெல்லை மேற்கு மாநகரத்துக்கு உட்பட்ட 20 வார்டுகளிலும் பூத் வாரியாக உறுப்பினர் சேர்க்கை பணிகளில் கழக நிர்வாகிகள் தீவிரமாக பணியாற்றினர்.

இந்த உறுப்பினர் சேர்க்கையில் நெல்லை சட்டமன்றத் தொகுதியில் 311 பூத்களில் 1,08,705 வாக்காளர்களும், நெல்லை மேற்கு மாநகர தி.மு.க.விற்கு உட்பட்ட 138 பூத்களில் 46,513 வாக்காளர்களும் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான அரசின் சாதனைகளால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் உறுப்பினர்களாக இணைந் துள்ளனர்.

உறுப்பினர் சேர்க்கை பணிக்கு உறுதுணையாக இருந்து நெல்லை சட்டமன்றத் தொகுதியில் ஒவ்வொரு பூத்தாக ஆய்வு செய்து பணியாற்றிய நெல்லை தொகுதி பார்வையாளர் ச.முத்துச்செல்வி, பகுதி பொறுப்பாளர்கள் நெல்லை பேட்டை கிழக்கு நமச்சிவாயம், மேற்கு சங்கர், தச்சநல்லூர் தெற்கு சுப்பிரமணியன், வடக்கு டாக்டர்.சங்கரகுமார் மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், பாக முகவர்கள் (BLA2) வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA) (BLC) மற்றும் கழகத்தினர் அனைவருக்கும் நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.வெல்வோம் இருநூறு படைப்போம் வரலாறு.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுரையின்படி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி, அலங்காநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட வலசை, குறவன்குளம் மற்றும் அலங்காநல்லூர் பகுதியில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் முன்னிலையில் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், பேரூர் செயலாளர் ரகுபதி, ஒன்றிய பொறுப்பாளர்கள் தன்ராஜ், முத்தையன், பரந்தாமன், அருண்குமார், அலங்காநல்லூர் பேரூராட்சி துணை சேர்மன் சாமிநாதன், பாலமேடு பேரூர் செயலாளர் மனோகரவேல் பாண்டியன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் ஆயிரக்கணக்கான பயனாளிகள் பங்கேற்றனர்.

---

இதுவரை ரூ.6 கோடியே 29 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 29 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்)** 11–08–2025 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | எம்.வேலு, டி.கே.எஸ்.நகர், 1வது மெயின் ரோடு, சென்னை –19 | 25,000/–– |
| 2. | கோ.முத்துகிருஷ்ணன், மேல்நல்லாத்தூர், திருவள்ளூர் மாவட்டம். | 25,000/– |
| 3. | எம். ரமேஷ், கடப்பேரி, மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம். | 25,000/– |
| 4. | கோ.பிச்சாண்டி, கல்லேரி,கொண்டசமுத்திரம், குடியாத்தம், வேலூர் மாவட்டம் | 25,000/– |
| 5. | பி. ஏழுமலை, டாக்டர் அம்பேத்கார் வீதி, வானூர் கிராமம், விழுப்புரம் – 109 | 25,000/– |
| 6. | க.தம்பிராஜா, வல்லம், தச்சக்காடு அஞ்சல், புவனகிரி, கடலூர் மாவட்டம். | 25,000/– |
| 7. | ஆர். சுகுமார், நரசிங்கன்பேட்டை, திருவிடைமருதூர், தஞ்சை மாவட்டம். | 25,000/– |
| 8. | மு.பகுருதீன், பொதக்குடி, சேகரை, கூத்தாநல்லூர், திருவாரூர் மாவட்டம். | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |